Opportunity classes and selective high schools

Information for parents and carers

# ‘நல்-வாய்ப்பு வகுப்பு’கள் மற்றும் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’கள்

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

### ‘நல்-வாய்ப்பு வகுப்புகள்’ (opportunity class) என்பன யாவை?

‘ஆண்டு 5’ மற்றும் ‘ஆண்டு 6’-இல் படிக்கும் செயல்-திறனும் அறிவாற்றலும் மிக்க மாணவ-மாணவிகளது கல்வித் தேவைகளை ‘நல்-வாய்ப்பு வகுப்பு’கள் பூர்த்தி செய்கின்றன. பொதுக் கல்வி முறைமையின் ஒரு பகுதியாக இருக்கும் NSW மாநிலம் முழுவதும் உள்ள 87 பாடசாலைகள் ‘நல்-வாய்ப்பு வகுப்பு’களைக் கொண்டுள்ளன (இணையம் வழியான நல்-வாய்ப்பு வகுப்புகளும் இதில் உள்ளடங்கும்).

### ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலைகள்’ (selective high schools) என்பன யாவை?

‘ஆண்டு 7’ முதல் ‘ஆண்டு 12’ வரையுள்ள வகுப்புகளில் படிக்கும் செயல்-திறனும் அறிவாற்றலும் மிக்க மாணவ-மாணவிகளது கல்வித் தேவைகளைத் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’கள் பூர்த்தி செய்கின்றன. 17 முழுமையான ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’களும், 26 பகுதித் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’களும், 4 வேளாண்மைத் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’களும், ஒரு இணையவழித் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’யும் உள்ளன (சில பாடசாலைகள் மாணவ-மாணவியர் தங்கிப் படிக்கும் வசதிகளைக் கொண்டவை).

### ‘நல்-வாய்ப்பு வகுப்பு’ அல்லது ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’ஒன்றிற்குச் செல்வதனால் கிடைக்கும் பலன்கள் யாவை?

படிப்பாற்றலும், அறிவாற்றலும் மிக்க மாணவ-மாணவிகளுக்குப் பிரத்தியேகக் கற்றல் மற்றும் நல்வாழ்வுத் தேவைகள் உள்ளன என்று ஆய்வு காண்பிக்கிறது. திறன்களையும் ஆற்றல்களையும் கொண்டுள்ள பிள்ளைகளுக்கான பொருத்தமான அளவிலான சவாலை வழங்கும் வகையில் கல்வியை அதே அளவில் அளிக்கும் விதமாக ‘நல்-வாய்ப்பு வகுப்பு’களிலும் ‘தெரிவு உயர்நிலைப் பாடசாலை’களிலும் அளிக்கப்படும் கல்வி வடிவமைக்கப்பட்டிருக்கும். தமதைப் போன்ற உயர் ஆற்றல்களைக் கொண்டுள்ள சம-நிலை மாணவ-மாணவியருடன் சேர்ந்து படிக்கும் பொழுது தாமும் அந்தக் குழுவில் ஒரு அங்கமாக இருக்கிறோம் என்ற புரிந்துணர்வு தமக்கு ஏற்படுகிறது என்று அதியளவுத் திறன்களையும் ஆற்றல்களையும் கொண்டுள்ள மாணவ-மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

### எனது பிள்ளை அதியளவு செயலாற்றல் கொண்டவர் அல்லது திறனாற்றல் மிக்கவர் என்பதை நான் எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்?

அதியளவு செயலாற்றல்  அல்லது திறனாற்றல் மிக்க பிள்ளைகள்:

- புதிய விடயங்களைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் மிக்கவர்களாக இருப்பர்
- புதிய கருத்துகள் அல்லது திறன்களை விரைவாகவும், எளிதாகவும் கற்றுக்கொள்வர்
- நல்ல ஞாபக சக்தி உடையவர்களாக இருப்பர்
- சிக்கலான கேள்விகளைக் கேட்பர்
- ஆக்கத்திறன் மிக்கவர்களாக இருப்பர்
- சிக்கலான விதங்களில் யோசிப்பவர்களாக இருப்பர்
- புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் பொழுது ஒரே விடயத்தை மீண்டும் செய்துபார்க்க வேண்டிய தேவை குறைவாகக் கொண்டவர்களாக இருப்பர்
- தமக்கு ஆர்வமும், பேராவலும் உள்ள விடயங்களில் அதியுயர் கவனக்-குவிவு கொண்டவர்களாக இருப்பர்

உங்களுடைய பிள்ளையிடம் இந்தக் குணாதிசயங்களில் பலவும் இருப்பதை நீங்கள் அவதானித்தால், விண்ணப்பிப்பதைக் கருத்தில் கொள்ளுமாறு உங்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

## சேர்க்கைக்கான தகுதியை மாணவ-மாணவியர் எவ்வாறு பெறுவர்?

இலவச இட-அமர்த்தல் சோதனை ஒன்றை மாணவ-மாணவியர் எழுத வேண்டும்.

'நல்-வாய்ப்பு வகுப்'பிற்கான இட-அமர்த்தல் சோதனையானது பின் வரும் மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்:

- வாசிப்புத் திறன்
- கணிதத் திறன்
- சிந்தனைத் திறன்கள்.

'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'க்கான இட-அமர்த்தல் சோதனையானது பின் வரும் நான்கு அங்கங்களைக் கொண்டதாக இருக்கும்:

- வாசிப்புத் திறன்
- கணிதத் திறன்
- சிந்தனைத் திறன்கள்
- எழுத்தாற்றல்.

## 'சமத்துவ இட-அமர்த்தல்' (Equity Placement)

குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட சமூகக் குழுக்களிலிருந்து வரும் செயல்திறனும், அறிவாற்றலும் மிக்க மாணவ-மாணவியரது பிரதி நிதித்துவத்தினை அதிகப்படுத்துவதற்காக 'சமத்துவ இட-அமர்த்தல் மாதிரி' (Equity Placement Model) ஒன்றைத் 'திணைக்களம்' அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த மாதிரியின் கீழ், பின் வருவோருக்கென குறிப்பிட்டதொரு சதவீதத்திலான இடங்கள் ஒதுக்கப்படும்:

- சமூக மற்றும், கல்வி அனுகூலங்கள் குறைவாகக் கிடைக்கப்பெறும் சமூகங்களிலிருந்து வரும் மாணவ-மாணவியர்
- ஆபொரிஜினிப் பூர்வகுடி மாணவ-மாணவியர்
- கிராமிய, மற்றும் தொலைதூரப் பிரதேசங்களிலிருந்து வரும் மாணவ-மாணவியர்
- இயலாமையுள்ள மாணவ-மாணவியர்.

'சமத்துவ இட-அமர்த்தல்' (Equity Placement)-இற்கென தனிப்பட்ட விண்ணப்பச் செயல்பாட்டு-முறை எதுவும் இல்லை. விண்ணப்பப் படிவத்திலுள்ள தரவுகள் மற்றும் 'திணைக்கள'த்திடமுள்ள தரவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு சமத்துவக் குழுவிலும் உள்ள பிள்ளைகள் அடையாளம் காணப்படுவர். மேலதிகத் தகவல்களுக்கு செல்ல வேண்டிய வலைத்தலம்: https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/fair-access

## இந்தத் தேர்விற்காக மாணவ-மாணவியர் பயிற்சி மேற்கொள்ள வேண்டுமா?

மனப்பாடம் மூலமாகக் கற்றுக்கொள்ளும் திறன்களை மதிப்பிடுவதை விட வெவ்வேறு விதங்களில் சிந்திக்கும் திறனைச் சிறப்பாய்க் கொண்டுள்ள மாணவ-மாணவியரை இந்த இட-அமர்த்தல் சோதனை அடையாளம் காணும். இந்த சோதனையின் உரு-மாதிரி எப்படி இருக்கும் என்பதைத் தெரிதுகொள்வதை உறுதிப்படுத்துவதற்காக மாணவ-மாணவியர் 'கல்வித் தினைக்கள'த்தின் வலைத்தலத்தில் உள்ள சோதனைகளைப் பார்க்கவேண்டும். இந்த சோதனைக்காக அளிக்கப்படும் விரிவான பாடப்-பயிற்சியின் காரணமாக எவ்வொரு வித்தியாசமும் ஏற்படும் என்பதற்கான நம்பக்கூடிய ஆதாரம் எதுவும் இல்லை என்பதைப் பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த கால 'நல்-வாய்ப்பு வகுப்'பிற்கான இட-அமர்த்தல் சோதனைகளை நீங்கள் பின்வரும் வலைத்தலப் பக்கத்தில் காணலாம்: https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/placement-test/opportunity-class-practice-tests

கடந்த கால 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை' இட-அமர்த்தல் சோதனைகளை நீங்கள் பின்வரும் வலைத்தலப் பக்கத்தில் காணலாம்: https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/placement-test/selective-high-school-practice-tests

## யாரால் விண்ணப்பிக்க இயலும்?

- NSW மாநிலத்திலுள்ள அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் அரசு-சாராப் பாடசாலைகளில் படிக்கும் மாணவ-மாணவியர் சேர்க்கைக்காக விண்ணப்பிக்கலாம்.
- 'நல்-வாய்ப்பு வகுப்பு' ஒன்றில் சேர்வதற்கு மாணவ-மாணவிகள் ஆஸ்திரேலியப் பிரசைகளாக அல்லது நியூ-சிலாந்துப் பிரசைகளாக இருக்கவேண்டும், அல்லது ஆஸ்திரேலிய நிரந்தர வசிப்பாளராக இருக்கவேண்டும்.
- வேறு மாநிலங்களையும், வெளிநாடுகளையும் சேர்ந்த மாணவ-மாணவியரது குடும்பம் பாடசாலை சேர்க்கையின் பொழுது NSW மாநிலத்தில் வசிக்கிறார்கள் என்றாலும், மாணவ-மாணவியரது படிப்புக் காலத்தில் NSW மாநிலத்தில் வசிக்கும் உத்தேசத்தில் அவர்கள் இருக்கிறார்கள் என்றாலும், அப்படிப்பட்ட மாணவ-மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம்.
- நிரந்தர வதிவிடத்திற்காக ஏற்கனவே விண்ணப்பித்திருக்கும், மற்றும் இட-அமர்த்தல் குறித்த முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக நிரந்தர வதிவிடம் வழங்கப்படும் என்பதற்கான நியாயமான எதிர்பார்ப்பை அளிக்கக் கூடிய உள்நாட்டு விவகாரத் திணைக்களத்தின் ஆவணங்களை வைத்துள்ள குடும்பங்களும் விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெறுவர்.

## விண்ணப்பங்கள் எப்போது துவங்கும்?

'நல்-வாய்ப்பு வகுப்பு'களுக்கான விண்ணப்பங்கள் மாணவ-மாணவியர் 'ஆண்டு 4'-இல் இருக்கும் பொழுதும், 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'களுக்கான விண்ணப்பங்கள் மாணவ-மாணவியர் 'ஆண்டு 5'-இல் இருக்கும் பொழுதும் துவங்கும். விண்ணப்பம் குறித்த முக்கியமான திகதிகளும், மற்ற தகவல்களும் 'திணைக்கள'த்தின் வலைத்தலத்தில் உள்ளன. https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/application-process

## என்னுடைய பிள்ளையைச் சேர்ப்பதற்காக நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?

- அனைத்து விண்ணப்பங்களும் https://shsoc.education.nsw.gov.au/ எனும் வலைத்தலத்தில் இணைய-வழியில் பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும்.
- விண்ணப்பம் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும்.
- 'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் உள்ள இரண்டு பாடசாலைகளையும், மூன்று 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'களையும் பெற்றோர்கள் முன்மொழியலாம். அவர்களுடைய தெரிவுகளை அவர்களுடைய விருப்ப வரிசைப்படி அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். ஒன்றிற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கான தகுதியை மாணவ-மாணவியர் பெறும் பொழுது, அவர்களுடைய முதல் விருப்பத்-தெரிவுப் பாடசாலை மட்டுமே அவர்களுக்குக் கொடுக்கப்படும்.
- இணைய-வழியில் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தடையாக இருக்கும் இயலாமை உள்ள பெற்றோர்கள் உதவிக்காக 1300 880 367-இல் 'உயர் செயல்திறன் - மாணவர் அணி' (High Performing Students Team)-யுடன் தொடர்புகொள்ள வேண்டும்.
- விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கோ, இட-அமர்த்தல் தேர்வுக்கோ செலவு எதுவும் இல்லை.

## 'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் மற்றும் 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'கள் ஆகியவை எங்கு அமைந்துள்ளன?

'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் NSW மாநிலம் முழுதும் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் நடத்தப்படுகின்றன மற்றும் பின் வரும் வலைத்தலப் பக்கத்தில் அவை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:
https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/choosing-a-school/opportunity-classes#findoc

'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'கள் NSW மாநில அரசாங்கப் பாடசாலைகளாகும், மற்றும் பின் வரும் வலைத்தலப் பக்கத்தில் அவை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:
https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools/choosing-a-school/selective-high-schools#findshs

## இணைய வழியிலான 'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் மற்றும் இணைய வழியிலான 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'கள்

கிராமியப் பகுதி அல்லது தொலைதூரப் பகுதி ஒன்றில் நீங்கள் இருப்பீர்களேயானால், Aurora College ('ஆரோரா காலேஜ்')-இல் ஒரு இடத்திற்காக விண்ணப்பிப்பதற்கு உங்களுடைய பிள்ளை தகுதிபெறக் கூடும். இந்த அரசாங்கப் பாடசாலையானது இணைய-வழி 'நல்-வாய்ப்பு வகுப்பு'களையும், ஒரு இணைய-வழி 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'யையும் கொண்டுள்ளது.

மாணவ-மாணவிகள் அவர்களுடைய உள்ளூர்ப் பொதுப் பாடசாலைக்குச் செல்வார்கள், மற்றும் 'இணைய-வழி உரையாடல்-சந்திப்பு முறைமை' (online conferencing system) ஒன்றைப் பயன்படுத்தி 'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் அல்லது 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை' வகுப்புகளில் கலந்துகொள்வார்கள்.

'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் உள்ள பாடசாலைகளில் படிக்கும் மாணவ-மாணவிகள், அல்லது 'நல்-வாய்ப்பு வகுப்பு'கள் மற்றும் 'தெரிவு உயர்நிலைப் பாடசாலை'களுக்கான சேர்க்கைகளை மேற்கொள்ளும் பகுதிகளில் உள்ள மாணவ-மாணவிகளுக்கு Aurora College -இல்  நுழைய விண்ணப்பிப்பதற்கான தகுதி இருக்காது.

## மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

- https://education.nsw.gov.au/schooling/parents-and-carers/choosing-a-school-setting/selective-high-schools எனும் வலைத்தலப் பக்கத்தில் கிடைக்கும் விண்ணப்பத்தைப் பற்றிய தகவல்களை வாசியுங்கள்.
- 'உயர் செயல்திறன் - மாணவர் அணி' (High Performing Students Team)-யுடன் தொடர்புகொள்ளுங்கள்.
  மின்னஞ்சல்: ssu@det.nsw.edu.au
  தொலைபேசி: 1300 880 367
- SHS Facebook: https://www.facebook.com/groups/772251106301086/
- OC Facebook: https://www.facebook.com/groups/159342048077050/

## தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை

உங்களுடைய விசாரிப்பில் உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து, உங்களுக்குத் தேவைப்படும் மொழியையும், நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி இலக்கத்தையும் தொலைபேசி இயக்குநருக்குக் கொடுங்கள். தொலைபேசி இயக்குநர் அந்த இலக்கத்தை அழைத்து உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.